# சந்தேக நிவாரணி
## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
என்.கஸ்தூரி, எம்.ஏ.பி.எல்

# 5. நான் யார்

**சுவாமி :** வா, மகனே வா. உன் வருகையால் எனக்கு எவ்வளவு ஆனந்தம் ! சென்ற முறை நான் கூறிய விடைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்தாயா? நான் விளக்கியவற்றை ஊக்கத்துடனும் உறுதியுடனும் சாதகப்படுத்தினாயா? அதன் வழி ஆனந்தம் உற்றாயா?

**பக்தன் :** ஏன் சுவாமி, இவ்வாறு கேட்கின்றீர்கள் ? என்னைப் போன்ற எந்த பக்தனாவது அமிர்தத்திற்கு ஒப்பான தங்களது அருள்வாக்கை வீணாக்குவானோ? நிலையான ஆனந்தம்பெற விரும்புபவன் அவ்வாறு செய்வானோ? மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நான் தாங்கள் கூறியவற்றினை இரவென்றும் பகலென்றும் பாராது ஆராய்வதிலும், அவைகளை ஊக்கத்துடனும் உறுதியுடனும் சாதனை செய்வதிலும் காலங் கழிக்கிறேன். எப்பொழுது அடுத்த வாய்ப்பு நேரும், எப்பொழுது தங்களைக் காண்பேன் என்பதே என் ஏக்கமாகும்.

**சுவாமி :** இத்தகைய விழிப்பு நிலையைப் பக்தர்கள் நன்கு உணர்ந்து போற்ற வேண்டும். ஒன்றுக்கும் உதவாத இந்த உலகத்தின் மீது பற்றுகொள்வது, பற்றிக்கொள்வது, அதனால் இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பது, துன்பம் நேர்ந்தால் சோர்ந்து கிடப்பது அதுதான். "அவிய மாயை." ஆனால் இறைவனைக் காணவேண்டுமே, அவரது நற்சொல்லைக் கேட்க வேண்டுமே, அந்த நேரம் மீண்டும் எப்பொழுது வரும் என்ற எண்ணமே பெரிதாகக்கொண்டு நாட்களை எண்ணிக்கொண் டிருப்பது, கேட்டதன் சாரத்தை உட்கொள்வது இவைதான் வித்ய மாயை என்பது. இந்த மாயையில் சிக்கியவர்கள் என்றாவது ஒருநாள் நிச்சயம் பூரணத்துவத்தை அடைவார்கள். இந்த வித்யமாயை

உன்னிடத்தே மிளிர்வதனால், நீ கொடுத்து வைத்தவன்தான். இறைவன் மீது கொண்ட இந்த நல்லெண்ணத்தை வளர விடு. எந்தக் காரணத்தைக் கொண்டும் கைவிடுவதோ அல்லது குறைத்துக்கொள்வதோ கூடாது. அவ்வாறு இருப்பின் நிச்சயம் நீ புனிதனாவாய், பூரணத்துவத்தை அடைவாய்; முக்தியைப் பெறுவாய்!

**பக்தன் :** சுவாமி! சென்ற திங்களில் தாங்கள் "நான் யார்" என்பதைத் தெளிவுபடுத்துவதாகக் கூறினீர்கள். அதையும் நான் அறிந்தேனானால், என்னிடத்தே இருக்கும் சிறு ஐயமும் நீங்கி விடும். எத்தகைய ஐயத்தின் சிறு நிழலுமின்றித் தங்களை வணங்குவதில் காலங் கழிப்பேன்; பேரின்பமும் பெறுவேன். இதனைக் காட்டிலும் பெரும் பாக்கியம் நான் பெறுவதற்கு வேறு உளதோ, சுவாமி ?

**சுவாமி :** நன்று மைந்தா, "நான்" என்பதன் உண்மை நிலையினை எடுத்துக் கூறுவது எளிதுதான். ஆனால் ஐயம் சிறிதும் இன்றி அறியும் வரையில் அதன்மீது பூரண நம்பிக்கை வைக்க முடியாது. எனவே, "நீ அதன்பால் தெளிவு கொள்ளும் வரை உனக்கு விளக்கிக் கூறினேன்" என்று நான் மன அமைதி பெறவும், "நான் மிகவும் தெளிவாக அறிந்து கொண்டேன்" என்று நீ மன அமைதி கொள்ளவும் இக்குறுகிய காலம் போதுமானதல்ல. என் செய்வது ? இந்தத் திங்களில் இதற்காகக் கிடைத்துள்ள நேரம் இவ்வளவுதான். எனினும் என்னுடைய முழு நேரத்தையும் அன்பர்களின் இன்பத்தின் பொருட்டுச் செலவிடுகின்றேனேயொழிய என் நன்மைக்காக ஏதுமில்லை. நான் சுயநலக்காரனாய் இருக்கிறேன் என்றால், அது என் பக்தர்கள் இன்பம் அடைய நான் பயன்பட்டேன் என்கிற எண்ணம் ஒன்றுதான். அந் நோக்கத்தினாலேயே நான் சென்ற திங்கள் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தேன். நெல்லூரர், கூடூர், வெங்கடகிரி, அவற்றைச் சார்ந்துள்ள கிராமங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்றேன். முடிவாகப் பெங்களூர்க்கு வந்து ஊர் திரும்பினேன். எனவே, பிரேம வாஹினிக்காக நான் எடுத்துக் கொண்ட நேரம் எவ்வளவு குறைவு பார்த்தாயா மகனே!

இந்தத் திங்கள் நான் ஐதரபாத்து, இராஜமந்திரி, சாமல் கோடு, செப்ரோலு, நஸ்வித்து முதலிய ஊர்களுக்குச் சென்றேன். எனக்கு ஓய்வே இல்லை. ஆதலினால் அடுத்த திங்களில் நீ விரும்பிய "நான் யார்" என்ற பொருள் பற்றி விளக்கமாகக் கூறுகிறேன். இப்பொழுது, "புர்ரகதா" என்றால் என்ன என்பது பற்றி கிராமியப் பாடலில் பாடுகிறேன். கவனி. இதை நீ நன்கு புரிந்துகொண்டால் "நீயார்" என்பதை அறிவதில் பெரும் பகுதி தெரிந்தவனாவாய். இதன் மூலமாக வைராக்கியத்தையும் பெருமளவில் பெறலாம். இதனால் நான் என்ன சொல்ல வேண்டுமென்று எண்ணுகின்றேனோ, அதை நீ விளக்கமாகவும், மிக எளிமையாகவும் அறிந்து கொள்வாய். இந்தப் புர்ர கதையை நீட்டிப் படிப்பதில் யாதொரு பயனுமில்லை. ஒவ்வொரு சொல்லிலும் புதைந்து கிடக்கும் அரிய பொருளை அறிய ஆழ்ந்துபடிக்க வேண்டும். இந்தப் புர்ரகதை உன்னை நிச்சயம் நன்னெறிக் கண் அழைத்துச் செல்லும்.

**பக்தன் :** நல்லது, சுவாமி. அதையாவது கூறுங்கள். அதனாலாவது நான் மன நிறைவு அடைவேன். அந்த அமிர்தத்தை உண்டு களிப்பேன்.

**சுவாமி :** நன்கு கவனிப்பாயாக ! (சுவாமி பாடுகிறார்):

1. ஜீவனே! தை தை என்று ஆடிடும் இந்தப் பொம்ம லாட்டத்தின் வேடிக்கையான ஆட்டத்தைப் பார்! அதன் நீண்ட நெடிய நேற்றைய நாளைய முன்னைய பின்னைய கதையினைக் கவனமாய்க் கேள்!

2. தாயின் கருப்பையின் இருள் சிறையில் முதலில் உலவிற்று. மெலிவுற்ற நிலையில் பிறந்தது. ஆனால் சுற்றி இருந்தோர் அனைவரும் மகிழ்வுற்றுப் புன்னகை பூத்து விருந்தளித்து விழாக்கொண்டாடினர்.

3. "ஐயோ! துன்பமே! நான் மீண்டும் பிறந்தேன்" என்று அறிந்து ஓவென்று அழுதது. ஆனால் பிறரோ அன்புடன்

எடுத்து அணைத்து முத்தாடி முறுவலித்துச் சிரிக்கச் செய்தனர்.

4. தன்னுடைய பாவ அழுக்கோடு நாணம் சிறிதுமின்றிக் களிப்பினிலே உருண்டது. மெல்ல எழுந்தது; மீண்டும் விழுந்தது; அடியெடுத்து வைத்தது; பிள்ளை விளை யாட்டை நாளும் புரிந்தது.

5. நண்பர் குழாத்துடன் கூடியது; தாவிக் குதித்தது; நூற்றுக் கணக்கான தந்திரங்களை, தொழில் முறையைப் பயின்றது. அகன்று, உயர்ந்து, பருத்து, பெருத்தது. ஆண்டுக்காண்டு வனப்புடனும் வளர்ச்சியுற்றது.

6. ஜோடியாகச் சேர்ந்தது. அன்புரையாடிக் கலந்தது; வானவில் போல் திகழ்ந்தது. கேளாத பண்களிலே தெவிட்டாத பாடல்களைப் பாடியது. புத்தம் புதிய இனிய பானங்களைப் பருகிப் பருகி மகிழ்ந்தது.

7.பிரம்மதேவன் ஆயிரமாயிரம் பொம்மைகளை இவ்வாறு ஜோடிகளாகப் படைத்தான். ஆட்டுவித்தால் ஆடுகின்ற இந்தப் பொம்மை வேறு பொம்மையோடு சேர்ந்து ஆடுவதை அறியவில்லை.

8. புனிதமுறும் காளையின் மூக்கணாங் கயிறுபோல இது தாமசமாம் கயிற்றால் பிணிக்கப்பட்டுள்ளது. பற்றுக்கு ஆட்பட்ட அடிமையின் முதுகிலே காமம் கோபம் என்னும் தேளின் கொடுக்குகள் ஓயாமல் கொட்டுகின்றன.

9. பிறர் வாடி வருந்தி தளர்ந்து குலை நடுங்குவதைக் கண்டு எக்காளம் கொண்டு, பெருமகிழ்ச்சியுடன் பேரவா கொள்கிறது. முடிந்தவரை பிறருக்குத் துன்பம் புரிகிறது. ஆனால் அணுவளவும் பிறர் துயரம் துடைப்பதில்லை.

10. செக்கச் சிவந்த கண்களுடன் வெகுண்டு, முரண்டு, பகை கொண்டு, கைகளையாட்டி ஓவெனக் கூவி சூளுரைக்கிறது. உண்மையிலே இது கொடுமைக் காட்சி. அதைப் பேய்ச் சினம் பிடித்து ஆட்டுகிறது.

11. கற்றும், கேட்டும், ஆராய்ந்தும், எடுத்துரைத்தும் உண்மை ஞானம் உணராமல் வீணே அலைகிறது. பாழும் உடலுக்கு, பசிக்கும் வயிற்றுக்கு வெற்றுத் தீனியை அடைக்கும் பாழ் செயலுக்கே எப்போதும் முயலுகிறது.

12. இந்த விந்தையான மாயா உருவம் அடுக்கடுக்காகப் புத்தகத்தை அழகுக்காக வைத்திருப்பதைப் பார்த்தாயா! படிப்பில் சிறந்த இப் பொம்மை தலைகீழ் மாற்றம், தலை தடுமாற்றம் ஆகியவற்றை பொறாமை கொண்டு பேசுவதைப் பார்!

13. காம இச்சை ஏற்படும்போது, பாவ உணர்ச்சிகள் மேலெழும்போது அது பேசிடும் குழூஉக்குறியினைக் கேட் பாய். அந்தோ! பாவத்திலே அது பேரின்பம் காண்கிறது.

14. அழகிலே, கட்டுடலிலே, வலிமையிலே செருக்குற்றுத் தன்னையே பாராட்டிக் கொள்ளுகிறது. எல்லாக் காலத் திலும் ஒவ்வொரு கண நேரத்திலும் பலவீன பாவத்தை நோக்கி அடிவைத்து நகருகிறது.

15. அது தள்ளாடி நடக்கிறது. திரைத்த முகத்தில் குழிந்த கண் கொண்டு விழிக்கிறது. குழந்தைகள் கூடி, "கிழவா! கிழவா!" என்று கூவிடும் போது பல்லேயில்லாப் பொக்கைவாயால் பழிக்கிறது. அதன் எலும்புக் கூடோ வலிவிழந்து போனதே !

16. முற்ற முடிவிலே, அவலப் போராட்டங்களில் பாழ்பட்டு அஞ்சிக் கண்ணீர் சிந்தி தன்னையே இழக்கிறது. பயனற்ற உருவமே! உன்னுடைய பெருமூச்சாலும் உரத்தகூச்சலாலும் பயன் என்ன கண்டாய்? உன்னுடைய ஆசைகள் எல்லாம் முடிவில் பிடிசாம்பலாகப் போகும்.

17. ஆ ! உயிர்ப் பறவை தன் சிறகுகளை அசைக்கிறது. உடல் கூட்டிலிருந்து வெளிப்பட்டு விரைந்து பறந்து மறைகிறது. வெற்றுடல் விறைக்கிறது. சூன்ய நிலையால் முறைத்துக் கொள்கிறது. பிணம் வீசி எறியப்படுகிறது. அது வீங்கி அழிகிறது.

18. பஞ்சபூதங்களால் ஆகிய பொய்மெய் (பொம்மை) யின் ஆசைகள் அழிந்து மண்ணோடு மண்ணாகிக் கூட்டம் நிறைந்த மேடையிலிருந்து ஒன்று வீழ்ந்ததற்காக மூடனே, நீ ஏன் அழுகிறாய் ?

19. உற்றார் உறவு, சுற்றம் நட்பு வீடுவரை வருந்தி வரும். அந்தோ! அந்த மாயா பொம்மை தன்னுடைய உறவு இறைவன் திருநாமம், பாவத்தில் இருந்து மீட்கும் சச்சி தானந்தம் ஆகியவற்றையும் மறந்துவிட்டதே.

20. ஓ ஜீவனே! ஒய்வாக இந்த வலுவற்ற உடலாகிய நாணல் மீது பெரு நம்பிக்கை வைக்காதே. மும்மூன்று துவாரங்கள் உடைய இந்த உடலாகிய வலுவற்ற படகு நட்டாற்றில் உன்னை அமிழ்த்திவிடும்.

21. கண்காணா இறைவன் திருக்கரங்கள் ஆட்டுவிக்கின்ற போது பொம்மை அழுகிறது; உறங்குகிறது; விழிக்கிறது. இறைவன் அதன் பின்னே நிற்கின்றான். ஆனால் அதுவோ நான் நான் என்று குரல் கொடுக்கிறது.

22. இறைவன் தருமம், கருமம் என்னும் வலிய கயிறுகளை மேலே வலிக்கிறான். அல்லது கீழே தளர்த்துகிறான். இதனையறியாத பொம்மை அரங்கத்தின்மீது அங்கு மிங்கும் நகருகிறது.

23. இந்த அற்ப ஆதரவற்ற பொம்மை இவ்வுலகத்தை உறுதியான நிலைகளாகக் கருதுகிறது. மின்னல் வேகத்தில் இறைவன் இந்த ஆட்டத்தை நிறுத்திவிடுகிறான். பெருமையும் பெருமிதமும் அகல்கின்றன.

24. ஜீவனே ! எறும்பு, பாம்பு, பறவை ஊடே பூமியில் நீ தள்ளாடினாய், காலத்தை வீணேகழிக்காமல், ஆண்டவன் அருளை அடைவதற்கு உரிய திருப்பாதையைத் தேடு; நாடு !

25. புண்ணியத்தைப் போற்று! சாயி கிருஷ்ணா காட்சி தருகின்றபோது கண் குளிரக் கண்டு கொள்க. அவனோடு உறவாடு, நீ யார்? உண்மை எது? அவனை அடைவது எவ்வாறு என்பதை நீ அறிந்துகொள்வாய்.

26. நூற்றாயிரம் அறிவார்ந்த அழகுச் சொற்கள் உன்னுடைய ஞானப் பசியினைத் தணித்திடுமா? ஆதலால் ஆத்மப் பெருவிளக்கை இப்பொழுதே ஏற்றிடுக! பற்றுத் தளையிலிருந்து விடுதலைபெறு! கவலையற்றுக் களித்திருப்பாய்.

27. வெற்றுப் பொம்மையின் பாடல் கேட்டாய். அது ஜீவனை வாடச்செய்து பின்னர் வரமளித்திருக்கிறது. ஜீவனே ! சத்ய சாய்நாத்தின் புனிதத் திருவிளையாடல்களைக் காண்க. அப்பொழுது உன்னையே நீ அறிவாய்.

**பக்தன் :** ஆ ! நான் அறிந்து கொண்டேன்! மிக நன்றாக அறிந்து கொண்டேன். "நான்" என்பது இந்த உடலோ புத்தியோ மனமோ அல்லது சித்தமோ அல்ல என்பதை. "நான்" என்பது மேற்கூறியவைகளில் ஒன்று இல்லாமையினால், "நாம்" என்பது பரமாத்மா. எனவே எல்லாம் பரமாத்மா! இவைகளை எல்லாம் நான் நன்கு உணர்ந்துகொண்டேன். "நான்" என்பது இந்த உடலும் அறிவும் இந்தத் தேகமும் புத்தியும் என்று அறியாமை யின் காரணமாக எழுந்த நம்பிக்கையினால், நாங்கள் பல துன்பங்களுக்கு ஆளாகிறோம். உண்மை, உண்மை ! தாங்கள் கூறிய வண்ணமே, நூலின்கண் அமைந்துள்ள இழையைப் போன்று, ஒன்றன்பின் ஒன்றாக அநுபவித்து வருகின்றோம். ஆ ! என்ன உண்மை ! என்ன உண்மை ! இந்தப் புர்ர கதை ஒன்றே போதும்; தாங்கள் கூறியவாறு இந்த உள்ளம் வைராக்கியத்திற்குத் திரும்பிவிடும்.

சுவாமி ! எனக்கு விளக்கம் தரத் தங்களுக்கு ஓய்வு இல்லை என்று தாங்கள் முதற்கண் கூறியபோது நான் ஏமாற்றமுற்றேன். அது என்னுடைய அறியாமை. எம் இறைவர் எவரையும் ஏமாற்றவும் மாட்டார், அல்லது துன்பம் தரவும் மாட்டார் என்பதை அறிந்திருந்தும் இவ்வாறு எண்ணிவிட்டேனே ! என்னே பேதைமை ! எந்த அளவு பெறுவேன் என்று நம்பி வந்தேனோ அதைவிடப்

பெருமளவு பேரானந்தம் அல்லவோ தங்கள் அருளால் பெற்றேன். தங்களது கருணையை என்னென்பேன் ! அன்பர்கள் பாடும்,

**"ஒரு துளிக்கண்ணீர் போதுமையா சாயியின்**
**உள்ளம் உருகுதற்கே!"**

என்ற பாடலை அவர்கள் பாடுவார்களே, "சாயி, பக்தர்தம் துன்பத்தைக் காணவும் சகியார்!" என்பன எவ்வளவு உண்மையானவை. நல்லது சுவாமி. நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

**சுவாமி :** மிக நன்று. போய், மீண்டும் வா மகனே! எனக்கும் போதுமான ஓய்வு இல்லை. என்னைக் காண வந்துள்ளோரும், தம் ஊர் திரும்ப விரும்புவோர்களும் காத்திருக்கின்றனர். அவர்களைக் கண்டும் நான் உசாவ வேண்டும்.

○